4th February 2013

பெறுநர்

மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்,
மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,
சென்னை.

பொருள்: அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் 3 % இட ஒதுக்கீடு பணி நியமனம் செய்யப்பட்டதை உறுதி செய்ய கோருதல் தொடர்பாக

பார்வை 1: G.O. Ms. No. 602, Social Welfare, 14th August 1981

பார்வை 2: G.O. Ms. No. 390, Cooperation, Food and Consumer Protection (CK) Department dated 24.11.2003

பார்வை 3: அரசாணை(நிலை)எண்: 114, உயர்கல்வி (டி1) துறை நாள்: 28.06.2012

பார்வை 4: அரசாணை(நிலை)எண்: 79, உயர்கல்வி (இ1) துறை நாள்: 28.05.2012

பார்வை 5: G.O. Ms. No. 4, School Education (X2) Department dated 19.01.2004

பார்வை 6: அரசாணை(நிலை)எண்: 203, உயர்கல்வி (டி1) துறை நாள்: 23.07.2010

பார்வை 7: Section 39 of PWD Act 1995

பார்வை 1 ல் கண்டவாறு "3 percent of the vacancies / seats shall be reserved in all State Public Services / Educational Institutions, under all kinds of management (Like Government, local bodies and aided managements) including Universities where the rule of reservation is applicable for the Scheduled castes/Scheduled Tribes and Backward classes".

பார்வை 2 ல் கண்டவாறு "The High Court, Madras in W.A.No.595/2003 has directed that the benefits of the Disabilities Act should each all the disabled covered by the person with disability act, and that necessary instructions should be issued to the concerned authorities follow the rule of reservation of 3% to the disabled in all the Government educational institutions and also the educational institutions running with the aid from the Government".

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961

பார்வை 3 ல் கண்டவாறு "481 பணியிடங்களை மட்டும் சம்பந்தப்பட்ட கல்லூரிகள் நிரப்பிட ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது".

பார்வை 4 ல் கண்டவாறு "01.06.2008 முதல் 31.05.2011 வரை காலியாக உள்ள 3120 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிட தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகள் 1976, விதி 11 (1)-இன்படி ஆய்வு செய்து, பல்கலைக்கழக மானியக் குழு விதி மற்றும் இனசுழற்சி முறையினை பின்பற்றி, கல்லூரி மேலாண்மைகள் அப்பணியிடங்களை நிரப்ப அனுமதி வழங்க அரசு ஆணையிடுகிறது".

பார்வை 5 ல் கண்டவாறு "3 (iii) Vacancies available as on 1.06.2003 in the aided schools will be filled up by both consulting employment exchange and through some other modes like newspaper publication advertisement, media, calling for the application by notifying the same in the notice board and consider all applications and select the best candidates from among them without there being any preference to the candidates sponsored by the employment exchange".

பார்வை 6 ல் கண்டவாறு "16.04.2010 அன்று நடைபெற்ற பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது அரசு நிதியுதவிப்பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள 952 ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது".

பார்வை 7 ல் கண்டவாறு "All educational institutions to reserve seats for persons with disabilities – All Government educational institutions and other educational institutions receiving aid from the Government, shall reserve not less than three percent seats for persons with disabilities".

மாற்றுத்திறனாளிகள் அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவது அவர்களது உரிமை ஆகும். இதனை பார்வை 1, 2, 7 ஆகியவை உறுதிப்படுத்துகின்றன. உயர் கல்வித் துறையிலும், பள்ளிகல்வித் துறையிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்பிக் கொள்ள அரசு உதவிப் பெறும் கல்லூரிகள், பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி

ஆணையிட்டுயுள்ளதனை பார்வை 3, 4, 5, 6 தெரிவிகின்றன. இதனடிப்படையில் நேத்ரோதயா மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரிடம் பின்வரும் கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு வேண்டுகிறது.

கோரிக்கைகள்:.

1. அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள் பணி புரிவதை உறுதி செய்தல் (மொத்தப் பணியாளரின் எண்ணிக்கை, மாற்றுத்திறனாளி பணியாளரின் எண்ணிக்கை) என்ற கணக்கீட்டு அடிப்படையில்.
2. அரசு அனுமதித்த ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியிடங்களை உதவிப் பெறும் கல்வி நிறுவனங்கள் தேர்வின் போது 3% இட ஒதுக்கீட்டினை பின்பற்றியுள்ளனவா என்பதனை உறுதி செய்தல் (மொத்த பணியமர்தப்பட்ட பணிகள், மாற்றுத்திறனாளிகள் (பார்வையற்றோர், கை கால் பாதிக்கப்பட்டோர் மற்றும் வாய் பேச இயலாத காது கேளாதோர்) பணியமர்தப்பட்ட பணிகள்).
3. பார்வை ஒன்றில் கண்ட அரசு ஆணை 602 அமுலுக்கு வந்த ஆண்டில் இருந்து அரசு உதவிப் பெறும் கல்லூரிகள், பள்ளிகளில் பின்னடைவு பணியிடங்களை கணக்கிட்டு சிறப்பு தேர்வு நடத்த வேண்டும்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

C. கோவிந்தகிருஷ்ணன்

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961